<u>முதன்மை சார்பு நீதிமன்றம், மயிலாடுதுறை</u>
<u>முன்னிலை திருமதி பி.கவிதா. பி.ஏ., எல்.எல்.பி,</u>
<u>முதன்மை சார்பு நீதிபதி.</u>

ம.சா. 1 நாள் 23.06.2023

| | | | |
|---|---|---|---|
| MCOP No. | 319/2019 | | |
| பெயர் | ஆதிலெட்சமி | த/பெ | |
| வயது | | தொழில் | |
| ஜாதி | | மதம் | |
| கிராமம் | | தாலுக்கா | |

சாட்சி அழைக்கப்பட்டு உறுதி மொழி செய்யப்பட்டு 2ம் எதிர்மனுதாரர் தரப்பு குறுக்கு விசாரணை

இந்த விபத்து சம்பந்தமாக நான் நேரடியாக பார்க்கவில்லை என்றால் சரிதான். யாருடைய கவனக்குறைவால் விபத்து நடந்தது என்று தெரியாது என்றால் சரிதான். நான் விபத்து சம்பந்தமாக மனுவிலும் பிரமாண வாக்குமூலத்திலும் சொல்லியுள்ள சங்கதிகள் அனைத்தும் எனது செவிவழியாக கேள்விப்பட்ட சங்கதிகள் என்றால் சரிதான்.விபத்து நடந்த இடம் E5 காவல் நிலைய எல்லைக்குட்பட்டபகுதி என்றால் சரிதான். விபத்து நடந்த தேதி 21.06.2017 என்றால் சரிதான். காவல் நிலையத்திற்கு தெரிவிக்கப்பட்ட தேதி 13.07.2017 ஆகும். 22 நாட்கள் காலதாமதமாக விபத்து குறித்து தகவல் காவல் நிலையத்திற்கு தெரிவிக்கப்பட்டது என்றால் சரிதான். விபத்து நடந்த இடம் ECR சாலை பரமன்கேணி பாலம் அருகே என்றால் சரிதான். விபத்து நடந்த இடத்திற்கும் கூவத்துார் காவல் நிலையத்திற்கும் 12 கிமீ துாரம் என்றால் சரிதான். காவல் நிலையத்தை தாண்டி தான் மருத்துவமனைக்கு செல்லவேண்டும் என்றால் சரிதான். விபத்து நடந்ததா உடனடியாக காவல் நிலையத்திற்கு தகவல் சொல்வது வழக்கம் என்றால் சரிதான். அவ்வாறு உடனே சொல்ல முடியவில்லை என்றாலும் மருத்துவமனையிலிருந்து காவல் நிலையத்திற்கு தகவல் சொல்லிவிடுவார்கள் என்றால் சரிதான். நான் மனுவில் சொல்லியப்படி விபத்து நடக்கவில்லை என்பதால் தான் விரைவாக காவல்நிலையத்திற்கு தகவல் சொல்லவில்லை என்றால் விபத்து நடந்த உடனே முதல் தகவல் அறிக்கை பதிவு செய்ய வேண்டும் என்ற கவனம் இல்லை. மருத்துவமனையில் கேட்ட பின்னரே பதிவுசெய்தோம். இந்த விபத்து சம்பந்தமாக காவல் நிலையத்தில் புகார் கொடுத்தது கிருஷ்ணமூர்த்தி மகன் திருஞான சம்பந்தம் என்றும், அவர் எனதுமாமனார் என்றால் சரிதான். விபத்தில் கழுத்து மற்றும் தலை மற்றும் உடலில் சிறாய்ப்பு காயம்ஏற்பட்டது என்று புகாரில் சொல்லியுள்ளார் என்றால் சரிதான். மாமனார் புகார் கொடுத்தபோது காவல்

நிலையத்தில் இதச பிரிவு 279,. 337 பிரிவின் படிதான் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டது என்றால் சரிதான். அந்த புகாரில் ஓட்டுநருக்கு எந்தவித காயமும் பாதிப்பும் ஏற்படவில்லை என்று சொல்லயுள்ளது என்றால் சரிதான். புகாரில் சொல்லப்பட்டுள்ள காயங்கள் அடிப்படையில் பார்த்தால் இந்த விபத்தினால் எனது கணவர் இறந்திருக்க வாய்ப்பு இல்லை என்ற வாறே உள்ளது என்றால் இல்லை. மாமனார் கொடுத்த புகாரில் இந்த காயங்கள் உடலுக்கு ஊறுவிளைவிக்கக்கூடியதாக இல்லை என்றால் சரியல்ல. எனது மாமனாருக்கு விவரங்கள் சொல்ல தெரியவில்லை. விபத்தினால் எனது கணவருக்கு இறப்பை ஏற்படுத்தவில்லை என்றாலும்அவருக்கு முன்பே இருந்த சர்க்கரை நோய் மற்றும் இதய நோய் காரணமாக இறந்தார் என்றாலும்,. விபத்துக்காயங்கள் அவரது இறப்புக்கு காரணம் அல்ல என்றால் சரியல்ல, அவர் சிறிய வயது, அவர் நார்மலாகத்தான் இருந்தார். கூவத்தூர் காவல் நிலையத்தாரால் இவ்வழக்கில் தாக்கல் செய்த இறுதி அறிக்கையில் இதச பிரிவு 279, 338 பிரிவின் கீழ் தான் தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் அதுபற்றி தெரியாது. மசாஆ 7 ஆவணத்தின் படி 21.06.2017 ல் விபத்து ஏற்பட்டதாக சொல்லப்பட்டுள்ளது ஆனால் எந்த வாகனம் மோதி விபத்து ஏற்பட்டது என்று சொல்லப்படவில்லை என்றால் சரிதான். அதில் கூவத்தூர் காவல்நிலைய காவளர் சண்முகத்திற்கு தகவல் கொடுக்கப்பட்டதாக எழுதப்பட்டுள்ள விபரம் மேலே உள்ள குறிப்புகள் எழுதப்பட்டுள்ளதற்கும் வேறு விதமாக உள்ளது என்றால் சரிதான். மசாஆ 8 ல் எனது கணவரின் மாத வருமானம் ரூ.2,000/- என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். அதில் விபத்து சம்பந்தமாக எந்த விதமான குறிப்புகளும் புறநோயாளி பதிவேட்டில் எழுதப்பட்டவில்லை. மசாஆ 9 ல் வாகன விபரங்கள் எதுவும் குறிப்பிடப்படவில்லை என்றால் அவர்கள் அடிப்பட்டவரின் விபரங்கள் மட்டும் பெற்றார்கள். மியாட் மருத்துவமனையில் அனுமதிக்கும்போது மசாஆ 7 ல் கழுத்தில் வலியும் , கை,கால்களை இயக்க முடியவில்லை என்று சொல்லப்பட்டுள்ளது என்றால் சரிதான். மியாட் மருத்துவமனையில் அனுமதித்தபோது எனது கணவரின் முன் மருத்துவ குறிப்புகள் பற்றி ஆவணங்கள் கொடுக்க வில்லை. அவரை விடுவிக்கும்போது சில மருந்துகள் அவர் எடுத்தக்கொள்ள வேண்டும் என்று சொல்லப்பட்டுள்ளது என்றால் சரிதான். பொதுவாக மருத்துவமனையிலிருந்து சிகிச்சை பெற்றவரை விடுவிக்கும்போது ஓரளவு நல்ல நிலையில் இருந்தால் தான் விடுவிப்பார்கள் என்றால் சரிதான். அதுபோல மியாட் மருத்துவமனையிலிருந்து விடுவிக்கப்பட்ட பின்னர் காவேரி மருத்துவமனையில் அவர் சிகிச்சைக்காக சேர்க்கப்பட்டார். அதில் மியாட் மருத்துவமனையில் சேர்த்தபோதும், காவேரி மருத்துமவமனையில்

சேரக்கப்பட்டபோது Low BP இருந்தது. காவேரி மருத்துவமனையிலிருந்து விடுவிக்கப்பட்ட போது அவருக்கு செவிலியர் உதவியை பெற்று தான் இருக்க வேண்டும் என்றுதான் அவரை விடுவிக்கப்பட்டது. வேலூர் CMC மருத்துவமனையிலிருந்து டிஸ்சார்ஜ் சம்மரியில் மசாஆ 14 ல் அவருக்கு உயிருக்கு ஆபத்து உள்ளதாக இல்லை. ஆனால் உதவியாளரை சார்ந்து இருக்க வேண்டும் என்றுதான் சொல்லப்பட்டுள்ளது என்றால் சரிதான். மருத்துவ ரசீதுகள் வழக்கிற்காக தயார் செய்யப்பட்டது என்றால் சரியல்ல. செலவுகள் அனைத்தும் தமிழ்நாடு மருத்துவ காப்பீடு திட்டத்தின் கீழ் Reimburse செய்யப்பட்டுள்ளது என்றால் ரூ.3,00,000/–ற்கு மட்டும் Reimburse செய்யப்பட்டுள்ளது, மீதிதொகை அனைத்தும் நாங்கள் கடன் வாங்கி செய்துள்ளோம். அதில் மொத்தமாக ரூ.4,40,000/– reimburse செய்யப்பட்டுள்ளதாக சொ்ல்லப்பட்டுள்ளது என்றால்சரியல்ல. இந்த reimburse செய்த விபரத்தை மனுவில் சொல்லாமல் மறைத்துள்ளேன் என்றால் மனுவில் சொல்லவில்லை. நான் சொன்ன அளவுக்கு மருத்துவ செலவுகள் ஏற்படவில்லை என்றால் சரியல்ல. விபத்து நடந்து 4 மாதங்கள் கழித்துதான் இறந்துள்ளார் என்றால் சரிதான். ஆனால் மருத்துவ சிகிச்சை தொடர்ந்திருந்தார். எனது கணவர் மருத்துவமனையில் தான் இறந்துபோனார் என்பது எங்கள் கட்சி என்றால் சரிதான். இறந்த அன்று காலை மூச்சு திணறல் ஏற்பட்டது அருகில் சிறிய மருத்துவமனையில் சேர்த்தோம். அவருக்கு சடலக்கூறாய்வு செய்யப்படவில்லை என்றால் சரிதான், அது சின்ன மருத்துவமனை என்பதால் சடலக்கூறாய்வு செய்யமாட்டார்கள். ஒரு மனிதனின் இறப்பிற்கு காரணம் உடற்கூறாய்வு செய்தால் தான் அதன் காரணம் தெரியவரும் என்றால் சரிதான். எனது கணவரின் உடல்கூறாய்வு செய்யவில்லை என்பதால் அவரது இறப்புக்கு காரணம் விபத்துதான் என்று அருதியிட்டு கூற முடியாது என்றால் சரிதான். சடலக்கூறாய்வு செய்தால் அவரது இறப்பிற்கு சரியாக காரணம் தெரியவரும் மற்றும் உண்மை தெரியவரும் என்பதாலும், நான் நஷ்ட ஈடு கோரமுடியாது என்பதாலும் தான் செய்யவில்ல என்றால் சரியல்ல. சென்னை கோர்ஸ் மருத்துவமனை மசாஆ 16 ல் வழங்கப்பட்ட அறிக்கையில் அவர் மாரடைப்பால் இறந்ததாக சொல்லப்பட்டள்ளது. அதில் விபத்தால் இறந்ததாக கூறப்படவில்லை என்றால் சரிதான். விபத்தில் காரில் பயணம் செய்யும்போது அவர் காயமுற்றதாக நான் சொல்லியுள்ளேன். காரில் பயணம் செய்யும் போது அவர் சீட் பெல்ட் அணியவில்லை என்றால் எனக்கு தெரியாது. சீட் பெல்ட் அணிந்திருந்தால் விபத்தினை தவிர்திருக்க முடியாது ஆனால் காயத்தை தவிர்திருக்கலாம் என்றால் அதுபபற்றி தெரியாது, விபத்திற்கு அவரது பங்களிப்பும் உள்ளது என்றால் சரியல்ல. அவரது வயது விபத்து காலத்தில் 29 என்பதற்கான பிறப்பு சான்றிதழோ, வேறு

கல்விச்சான்றோ தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். அவர் ஆசிரியர் வேலை பார்த்தார் என்பாதால் மாதம் ரூ.40,000/– சம்பாதித்ததாக சொல்லவதற்கு அவர் வேலை செய்த பள்ளியில் உள்ளவர்களை சாட்சியாக விசாரித்தால் தெரியவரும் என்றால் ஆமாம். விபத்து ஏற்படுத்திய வாகனத்திற்கு அனைத்து ஆவணங்களும் நிலுவையில் உள்ளதா என்பது பற்றி எனக்கு தெரியாது. விபத்துதான் எனது கணவரின் இறப்புக்கு காரணம் அல்ல என்றும் வேறு உடல் உபாதைதான் காரணம் என்றாலும் சரியல்ல. எனக்கு எந்த இழப்பீடும்கிடைக்கக்கூடியதல்ல என்றும், ஒரு வேலை நீதிமன்றம் இழப்பீடு முடிவுசெய்தால் என் கணவரின் கவனக்குறைவும் கருத்தில் கொள்ள வேண்டும் என்றால் சரியல்ல. எனது கணவரின் இறப்புக்கு காரணம் விபத்துதான் என்று நிரூபிக்கப்படாத நிலையிலும் சடலக்கூறாய்வு செய்யப்படாத நிலையிலும் எனக்கு எந்த இழப்பீடும் கிடைக்கக்கூடியதல்ல என்றாலும் சரியல்ல.

இத்திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல அதனை என்னால் தட்டச்சரிடம் சொல்லப்பட்டு தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சியிடம் படித்துக் காண்பித்து அவரால் சரியென ஒப்புக்கொள்ளப்பட்டது.

முதன்மை சார்பு நீதிபதி,
மயிலாடுதுறை.

<u>முதன்மை சார்பு நீதிமன்றம், மயிலாடுதுறை</u>
<u>முன்னிலை திருமதி பி.கவிதா. பி.ஏ., எல்.எல்.பி,</u>
<u>முதன்மை சார்பு நீதிபதி.</u>

ம.சா. 2 நாள் 23.06.2023

| | | | |
|---|---|---|---|
| MCOP No. | 319/2019 | | |
| பெயர் | பொன்னிவளவன் | த/பெ | |
| வயது | | தொழில் | |
| ஜாதி | | மதம் | |
| கிராமம் | | தாலுக்கா | |

சாட்சி அழைக்கப்பட்டு உறுதி மொழி செய்யப்பட்டு 2ம் எதிர்மனுதாரர் தரப்பு குறுக்கு விசாரணை

விபத்தினால் எனக்கு எந்த காயமும் இல்லை என்றால் சரிதான். காரை ஓட்டிய ஓட்டுநருக்கும் எந்த காயமும் இல்லை என்றால் சரிதான். கார்த்திக்கு மட்டுமே காயம் என்றால் சரிதான். விபத்து சம்பந்தமாக காவல் நிலையத்்தில் யார் புகார் கொடுத்தார்கள் என்றால் இறந்துபோன கார்த்திக்கின் தந்தை தான் புகார் கொடுத்துள்ளார். வாகன விபத்து ஏற்பட்டால் காவல் நிலையத்தில் உடனடியாக புகார் கொடுக்க வேண்டும் என்றால் சரிதான். விபத்து நடந்து காலதாமதமாக 22 நாட்கள் கழித்து புகார் கொடுக்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். எப்போது புகார் கொடுக்கப்பட்டது என்று தெரிந்துகொண்டேனா என்றால் இல்லை. விபத்து நடந்து புகார் கொடுத்தது எப்போது என்று தெரியவில்லை. நான் தான் இறந்து போன கார்த்திக்கி உடன் பயணம் செய்தேன். நான் ஏன் புகார் கொடுக்க வில்லை என்றால் நான் அந்த சூழ்நிலையில் இல்லை. விபத்து சொல்லப்பட்ட நிகழ்வில் நிகழவில்லை என்பதால் தான் புகார் கொடுக்கவில்லை என்றால் சரியல்ல. எனது பிரமாண பத்திரத்தில் உள்ள சங்கதிகள் யார் சொல்லி எழுதப்பட்டது என்றால் நான்தான் சொன்னேன். உடனடியாக விபத்து சம்பந்தமாக புகார் கொடுக்க வேண்டும் என்று கார்த்திக்கிடம் சொல்லவில்லை. விபத்து நான் சொல்லியுள்ள நிலையில் விபத்து நிகழவில்லை என்பதால் தான் புகார் கொடுக்க வில்லை என்றால் சரியல்ல. விபத்து நடந்து வெகு நாட்கள் கழித்துதான் கார்த்திக் இறந்துபோனார் என்றால் சரிதான். அவர் இறந்த பின் அவரது சடலத்தை கூறாய்வு

செய்யவில்லை என்றால் எனக்கு தெரியாது. ஒருவர் எப்படி இறந்தார் என்பதை அறிக உடல்கூறாய்வு செய்தால் தான் தெரியும் என்றால் சரிதான். உடல்கூறாய்வு செய்யவில்லை என்றால் அப்போது இறந்ததற்கான காரணத்தை தெரிந்துகொள்ள முடியாது என்றால் சரிதான். கார்த்திக்கின் சடலம் சடலகூறாய்வுக்கு உட்படுத்தவில்லை என்பதால், அவர் எதனால் இறந்தார் என்று தெரிந்துகொள்ள முடியாது என்றால் சரிதான்.

இத்திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல அதனை என்னால் தட்டச்சரிடம் சொல்லப்பட்டு தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சியிடம் படித்துக் காண்பித்து அவரால் சரியென ஒப்புக்கொள்ளப்பட்டது.

முதன்மை சார்பு நீதிபதி,
மயிலாடுதுறை.